# மொழிப்போர்த் தளபதி எல்.கணேசன், நட்பின் மலை; தோழமையின் உச்சம்!



**மொ**ழிப்போர் தளபதி எல்.கணேசன் ஜனவரி 4 ஆம் தேதி முதல் 'இன்றில்லை எனும் பெருமை' உடையவர் ஆனார். ஆம்; இருந்தார் ஆனார், அவர்! பேராஇயற்கையில் புதைந்து போனார் அந்த மனிதர்!

காலம் 'அன்' விகுதி பெற்று காலனாகி விட்டான். காலன் என்றோ, எமன்யமன்கூற்றுவன் என்றோ ஒருவன் இல்லை. எல்லாம் காலத்தின் கொடை. அந்தக் கொடை தடுக்க முடியாதது. நிகழ்ந்து கொண்டே இருப்பது.

காலம்காலன் எல்.ஜியைக் களவாடிவிட்டது. இயற்கை நிகழ்வு நிறைவேறிவிட்டது. ஆனால் அந்த மனிதர் நம்மோடு பழகியதை, வாழ்ந்ததை எப்படி மறக்க முடியும்? அவரின் போர்க்களங்களை எப்படி நாம் மறக்க முடியும்? நம்மைவிட்டு மறைந்து போன அம்மனிதரின் சிறப்பு இயல்புகளை நாம் எண்ணிப் பார்க்காமல் எப்படி இருக்க முடியும்?

எதையும் படித்துப் பார்த்து அந்தக் கருத்தை அவர் மொழியில் அவர் நடையில் சொல்வதில் எழுதுவதில் கெட்டிக்காரர் எல்.ஜி. ஆங்கிலத்தில் சிந்தித்துத் தமிழில் பேசும் பழக்கமுடையவர் அவர். திராவிட இயக்கத்தை, திராவிடப் பேரியக்கம் என்றே பலுக்குவார். எந்த ஒரு வரலாற்று நிகழ்வையும் அரசியல் பிரச்சினையையும் புதிய கோணத்தில் எடுத்து வைப்பார்.

**எல்.ஜியைப் புதிதாகப் பார்க்கிற எவரும் எதையும் அலட்சியமாகப் பார்ப்பவர், மதிக்கத் தெரியாத முரட்டு ஆள் என்றுதான் நினைப்பர். அவரோடு பேசி, பழகிப் பிரச்சினைகளை விவாதிக்கிற போதுதான் அந்த மனிதனின் "உள்ளார்ந்த ஆளுமை" தெரியும்.**

**அவர் அரசியலில் அச்சம் இல்லாதவர். போராட்டம், சிறை என்பதைப் பற்றி கவலை அற்றவர். எந்த இருண்ட சூழ்நிலைகளையும் எதிர் கொள்ளத் தயங்காதவர். 'எமர்ஜன்சி' காலம். நாடு நடுங்கிக் கொண்டு இருக்கிறது.**

**தி.மு.கழகம் அதன் அரசியல் எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்டு இருக்கிறது. தலைவர் கலைஞர் அன்பகத்தில் இருந்து கட்சியை இயக்கிக் கொண்டு இருக்கிறார். தலைவர் கலைஞரிடம் கார் ஓட்டுநர்களும் தலைமை நிலையத்தின் கழகச் செயலாளர்களும் கைது செய்யப்பட்டு கொண்டு இருக்கிறார்கள்.**

**இந்தச் சமயத்தில், தலைமைக் கழகத்திற்கு பெட்டியும் படுக்கையுமாக அங்கேயே தங்கிக் கட்சிப் பணியாற்ற எல்.கணேசன் வருகிறார். அவருடைய கட்சி உணர்ச்சி, பற்று, கழகத்தை விட்டு அகலாத பேராண்மை எம்மைப் பெரிதும் ஈர்த்தது. தினம் அன்பகம் சென்று வருகிற கழகத் தோழர் களுள் நாமும் ஒருவர் ஆவோம்.**

அநேகமாக எல்.ஜி. 1976 ஆகஸ்ட் இறுதியில் அன்பகம் வந்தார் என்று சொல்ல வேண்டும். அவரை நாம் அன்பகம் சென்று காணும் முன்னம் ஒரு நாள் காலை 9.30 மணியளவில் எம்மையும் டி.கே.சீனிவாசனையும் 'எல்டாம்ஸ் ஹோட்டலில்' சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்த போது பார்த்தார். இரண்டு பேரையும் குசலம் விசாரித்தார்.

மூன்று பேரும் நடந்து 'அன்பகம்' சென்றோம். அதிக தூரமில்லை. 'திருநாவுக்கரசு என்ன செய்றீங்க' என்றார். 'அச்சகம் வைத்து இருக்கிறேன். எல்டாம்ஸ் ஹோட்டலிலிருந்து நான்கைந்து கட்டடம் தள்ளி...'. என்றோம்.

டி.கே.சீ.யிடமும் அரசியல் பேசிக் கொண்டு வந்தார். 'கலைஞர் 10, 10.30 மணிக்கு காலையிலேயே வந்துவிடுவார். நான்குளித்து 9.30க்கெல்லாம் சிற்றுண்டி முடித்து தயாராகிவிடுவேன்' என்றார் எல்.ஜி.

அன்பகம் இப்போது உள்ளது போன்ற வசதியான கட்டடமாக அப்போது இல்லை. அது பழைய கட்டடம். மொட்டை மாடியில் கீற்று கொட்டகையும் இருந்தது. அன்பகத்தில் நுழைந்தோம். முதல் மாடி மட்டும்தான். கழகத் தோழர்கள் மிகச் சிலரே இருந்தனர்.

எல்.ஜிக்குத் தரையில் தான் படுக்கை விரிக்கப்பட்டு இருந்தது. அதில் ஐந்தாறு புத்தகங்கள் இருந்தன. இன்னொரு பக்கமிருந்து சில தமிழ் புத்தகங்களை எடுத்தார். முதலில் கூறியவை எல்லாம் ஆங்கிலப் புத்தகங்கள். தமிழில், சங்க இலக்கியங்கள் பற்றிய ஆய்வாக இருந்தன.

எல்.ஜிவைத்திருந்த புத்தகங்களை எல்லாம் முதலில் டி.கே.சீனிவாசன் பார்த்தார். நாமும் பார்த்தோம். "நான் அன்பகம் வந்ததிலிருந்து இந்தப் புத்தகங்கள்தான் எனக்குத் துணை. காலை 11.00 மணியிலிருந்து இரவு கலைஞர் இருக்கிறவரை கழகத் தோழர்கள், முன்னணி வீரர்களின் வருகை இருக்கும். இரவு சிற்றுண்டிக்குப் பிறகு இந்தப் புத்தகங்கள்தான் எனக்கு நண்பன்; தோழன் எல்லாம்" என்று எங்கள் இருவரையும் பார்த்து எல்.ஜி. கூறினார்.

அதோடு விடவில்லை. எல்.ஜி. படித்துக் கொண்டு இருக்கிற ஆங்கிலப் புத்தகங்களில் ஒரு பெரிய புத்தகத்தை கையில் எடுத்துக் கொண்டார். இன்னும் இதனை நான் முடிக்கவில்லை. படித்துக் கொண்டு இருக்கிறேன். மீதமுள்ள புத்தகங்களை எங்கள் இருவருக்கும் எல்.ஜி. கொடுத்துவிட்டார். அத்தனையும் புத்தம் புதிய புத்தகங்கள்.

எல்.ஜி. புத்தகங்களைத் தொடர்ந்து படிக்கும் பழக்கமுள்ளவர். அவர் புத்தகங்களைச் சேமித்து வைக்கமாட்டார். ஒரு புத்தகத்தை அவர் எங்குப் படிக்கிறாரோ அது எப்போது முடிகிறதோ அங்கேயே அதை நண்பர்களுக்கு வழங்கிவிடுவார் அல்லது புத்தகங்களைப் படிக்கிற பழக்கமுள்ள வர்களுக்கு எப்படியாவது சேர்த்துவிடுவார். புத்தகங்களைச் சேர்த்து வைத்து நூலகமாக ஆக்க விரும்பமாட்டார். அப்படி ஒரு பழக்கம் அவருக்கு!

அவர் படிக்கிற புத்தகத்திலிருந்து குறிப்பை மட்டும் எடுத்துக் கொண்டு புத்தகத்தைக் கொடுத்துவிடுவார். அந்தக் குறிப்புகளைப் பயன்படுத்த தவறமாட்டார். இப்படிப்பட்ட பழக்கமுடையவர் எல்.ஜி. அவரை நாம், "பெரிய எழுத்து விக்கிர மாதித்தன் கதையிலிருந்து கார்ல்மார்க்ஸ், ஹெரால்டு லாஸ்கி வரை படித்துள்ளீர்கள். மேடையில் பேசுகிறீர்கள். சமயங்களில் எழுதுகிறீர்கள். ஆனால் நீங்கள் புத்தகங்களைச் சேர்த்து வைப்பதில்லையே ஏன்" என்று கேட்டு இருக்கின்றோம்.

எல்.ஜி, "களப்பணியில் இருப்பவனுக்கு புத்தகம் ஒரு துணை கருவி; அதன் கருத்துகள் ஒரு வழிகாட்டியாகவும் இருக்கலாம். வீட்டில் நூலகம் என்று இருந்தால், நான் புத்தகப் புழு ஆகிவிடுவேன் என்கிற அச்சம் எனக்கு உண்டு" என்பார்,

**க. திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்



"திருவள்ளுவரைப் பற்றிய நாடோடி கதைகளில் அவருடைய தாய் தந்தையரைப் பற்றி ஒரு செய்தி சொல்லப்படுகிறது. தந்தை பகவனும் தாய் ஆதியும் கூடிப் பெறுகின்ற பிள்ளைகளைப் பிறந்த இடத்திலேயே விட்டு விட்டு பகவனோடு தாய் ஆதி சென்று விடுவாராம். அந்த ஆதியைப் போல நல்ல நூல்களை யெல்லாம் படிக்கிற இடத்திலேயே நீங்கள் விட்டுவிடுவது சரியானது அல்லவே" என்போம் நாம். அப்படிச் சொன்னால் எல்.ஜி. விழுந்து விழுந்த சிரிப்பார்.

இப்படி நூல்களைக் கொடுத்துவிடும் எல்.ஜி. 'அன்று படிக்கவில்லை' என்றும் 'இன்னும் படிக்க இருக்கிறது' என்றும் எடுத்து வைத்து கொண்ட புத்தகம் மாசேதுங்கைப் பற்றிய வரலாற்றுப் புத்தகம். இதற்குள் நேரம் ஓடிக் கொண்டு இருக்கிறது. தலைவர் கலைஞரின் வருகைக்கு எதிர்நோக்கி அன்பகம் காத்திருக்கத் தொடங்கியது. கழகத் தோழர்களும் முன்னணி வீரர்களும் வரத் தொடங்கிவிட்டனர்.

கலைஞரின் 'எமர்ஜன்சி' இராஜாங்கம் முதல் மாடியில் நடக்கும். 10.30 மணிக்கெல்லாம் அன்பகம் தோழர்களால் 'களை' கட்டிவிடும். கலைஞர் வருகிறார் என்று தெரிந்து கொண்டு பிறகு தலைவர்கள் சிலர் வரத் தொடங்குவார்கள். அதற்கு முன்பே கலைஞரை வரவேற்று அமர வைக்க எல்.ஜி. தயாராக இருப்பார். கலைஞருக்கு வேண்டிய உதவிகள், அவர் கேட்கும் வினாக்களுக்கு விடைகள் எனப் பணிகள் எல்.ஜிக்கு இருக்கும்.

இந்தப் பணிகளுக்கிடையே தான் அவர் இரவில் நெருக்கடி நிலையின் போதுஎமர்ஜன்சியின் போது புத்தகங்களைப் படித்து வந்தார். அவர் தங்கியிருந்தபோது எல்டாம்ஸ் சாலை வேலு மிலிட்டெரி ஹோட்டல் எதிரே இருந்து நாம் நடத்தி வந்த அச்சகம். அந்த இடத்திற்கு எல்.ஜி. இரண்டு முறை தான் வந்தார்.

"தினம் ஒரு முறை வந்து போகலாமே" என்றோம் நாம்.

"இந்த நேரத்தில் அன்பகத்தை விட்டுவிட்டு மிக அதிக நேரம் வெளியில் இருப்பது கூடாது. தலைமைக் கழகத்தில் யாராவது ஒருவர் இருந்தே ஆக வேண்டும் என்று முடிவு எடுத்துதான் இந்தப் பணியை மேற்கொண்டு இருக்கிறேன்", என்று எம்மிடம் உறுதியாக தெரிவித்தார் எல்.ஜி.

நாம் அதனை அப்போது மிகுந்த மகிழ்ச்சியுடன் செவி மடுத்தோம். சில நாள்களில் அவரோடு அன்பகத்தில் இருந்துவிட்டு பிறகு நாம் அச்சகத்திற்குத் திரும்புவோம். அச்சகம் முன்பகுதிவீடு பின்பகுதியில் இருந்தது. இது அன்பகம் சென்று வர எமர்ஜன்சி காலத்தில் எமக்கு மிக எளிதாக இருந்தது.

1976 ஆம் ஆண்டு செப்.9 ஆம் தேதி சீனப் பெருந் தலைவர் மாசேதுங் மறைந்தார் எனும் செய்தி உலகளாவி வெளிவந்தது. இந்தியாவில் எமர்ஜன்சி காலம். தலைவர்கள் சிறையில், திராவிட இயக்கத்தினர் சிறையில். மார்க்சிஸ்டுகள் சிறையில். ஒரு மாபெரும் புரட்சியாளர் சீனாவை உலக மக்களைப் பார்க்கச் செய்தவர். நெடும் பயணத்தை நடத்திக் காட்டி வெற்றி பெற்ற மாசேதுங் மரணம் அடைந்து விட்டார்.

மாசேதுங் மரணம் அடைந்த அன்று நாம் அன்பகம் செல்லவில்லை. இரண்டு நாள்கள் கழித்து இரவு 11.00 மணி அளவில் எல்.ஜியை சென்று பார்த்தோம். தலைவர் கலைஞர் அப்போது தான் அன்பகத்திலிருந்து வீட்டிற்குச் சென்றிருந்தார்.

நம்மைப் பார்த்தவுடன் எல்.ஜி, 'என்ன திருநாவுக்கரசு ஆளையே காணோம்' என்றார். நாம் நிலைமைகளை விளக்கினோம். மாசேதுங் பற்றி ஒரு கட்டுரையை முரசொலியில் எழுதப்போகிறேன் என்றார்.

"அப்படியா? தலைவரிடம் கேட்டீர்களா, சொன்னீர்களா?" என்றோம்.

"எழுதுங்கள் என்று ஒரே வார்த்தையில் சொன்னார் கலைஞர்" என்றார் எல்.ஜி.

நமக்கு வியப்பு ஒரு புறம். அரசியல் சூழல் ஒரு புறம். அச்சம் ஒரு புறம் என இத்தனையும் பிடித்து உலுக்கின; ஆட்டின. ஆனால் எல்.ஜி. மாசேதுங் பற்றி எழுதிக் கொண்டே இருந்தார்.

தலைவாழை இலையில் சுடுசோறும், தொடுகறியும், நல்ல கூட்டும், நெருப்பில் காய்ச்சி உருக்கிய நெய்யும், சிலிர்த்த பருப்பும் இட்டு உண்டு; பின்னர் மிளகு நீரும் சாற்றமுதாய் சாற்றி இலைக்கருப்பிட சுவைத்து உண்டபின், ஆறிய சோற்றில் நீரிடாத தயிரை இட்டு பிரண்டை துவையலோடு அமுதமாய் உண்ண, எந்த சுவை கிடைக்குமோ அந்தச் சுவையை அனுபவிப்பது போல முத்து முத்தாய் கருப்பு மையில் எல்.ஜி.எழுதிக் கொண்டே இருந்தார். மாசேதுங்கைப் பற்றி!

கட்டுரையை எல்.ஜி. முடித்துவிட்டார். அந்த எழுத்துப் பிரதியைப் படிக்க நம்மிடம் அவர் தரவில்லை. 1976 செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் "சீனத்து செம்பரிதி மறைந்தது" எனும் தலைப்பில் நான்கு கட்டுரைகள் முரசொலியில் வெளிவந்தன. அவை மிக அருமையாக எழுதப்பட்டு இருந்தன.

இதில் கவனிக்க வேண்டிய செய்தி என்னவென்றால் மாசேதுங் பற்றிய புத்தகத்தை எல்.ஜி. எப்போது படிக்கத் தொடங்கி இருந்தார் என்று நமக்குத் தெரியாது. ஒரு தலைவர் மரணம் அடைந்துவிடுவார் என்று யாரும் முன் கூட்டியே அவரைப் பற்றி தெரிந்து கொள்ள புத்தகம் படிக்க முடியாது. ஆனால் எல்.ஜி. படித்ததும் அப்படி இல்லை. இவர் தற்செயலாகப் படிக்கப் போய் மாசேதுங்கின் மரணம் இயற்கையாக நிகழ்ந்துவிட்டது. நெருக்கடி நேரத்தில் எல்.ஜி.யின் 'சீனத்து செம்பரிதி' தமிழ்நாட்டில் மறைந்து தோன்றியது.

* * * *

எல்.ஜி. என்ற பெயரைக் கேட்டவுடன் நமக்கு நினைவுக்கு வருவது 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம்தான்! இப்போராட்டத்தைத் தி.மு.கழகம் தான் முன்னின்று நடத்தியது. ஆனால் கழகம் போராட்டத்தைத் தொடங்குவதற்கு முன்பு, மாணவர்கள் போராட்டத்தை ஒரு நாள் முன்னதாகத் தொடங்கிவிட்டனர்.

1965 ஆம் ஆண்டு பிப்.8 முதல் 11 ஆம் தேதி வரை அவர்கள் நடத்திய போராட்டம் மிகப் பெரிய அளவில் நடைபெற்றது. இராணுவத்தை மாநில அரசு அழைக்கிற அளவுக்கு நிலைமைகள் வளர்ந்தன. மாநில காவல் துறை தலைவர் அருள் முதல்வர் எம்.பக்தவத்சலத்தோடு முரண்பட்டுவிட்டார் என்ற செய்திகள் மக்களிடம் பரவியது. இதனால் நாட்டில் பதற்றம் ஏற்பட்டு விட்டது. தமிழ்நாட்டில் ஒரு உள் நாட்டுப் போர் நடைபெறுவதைப் போல இருந்தது.

**அறிஞர் அண்ணா இந்தி எதிர்ப்புப் போர் சமூக விரோதிகள் கையில் போய்விடுமோ என்று பயந்தார். போராட்டத்தை நிறுத்துங்கள் என மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துப் பார்த்தார். ஆனால் மாணவர்களின் செவிகளில் அறிஞர் அண்ணாவின் வேண்டுகோள் விழுந்ததாகத் தெரியவில்லை. மாணவர் போராட்டத்தில் தி.மு.கழக மாணவர்கள் மட்டும் ஈடுபடவில்லை. தமிழ் உணர்ச்சி தமிழர் என்கிற இன உணர்வு உள்ள மாணவர்களும் அதிகமாகக் கலந்து கொண்டனர். இந்தப் போராட்டத்தில் தி.மு.கழக மாணவர்களின் வரிசையில் முன்னணியில் நின்றவர்கள் முதன்மையானவர் எல்.கணேசன் எல்.ஜி. அதனால் அவர் மொழிப்போர் தளபதி எனப் பின்னாளில் அழைக்கப்பட்டார்.**

(தொடர்ச்சி நாளை)





முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, அரகண்டநல்லூர் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் பயிலும் 128 மாணவ, மாணவியர்களுக்கு "உலகம் உங்கள் கையில்" திட்டத்தின் மூலமாக விலையில்லா மடிக்கணினிகளை கழக துணைப் பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்வராஜ், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், அ.சா.ஏ.பிரபு, எஸ்.லூயிஸ், பேரூராட்சி செயலாளர் சுந்தரமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், பேரூராட்சி தலைவர் ராயல் அன்பு, மாவட்ட கவுன்சிலர் ராஜீவ்காந்தி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### திருப்பரங்குன்றம் மலை தீப விவகாரம்:

# தி.மு.க. ஒருபோதும் நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபடாது!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

*புதுக்கோட்டை, ஜன.11-*

*புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் "உலகம் உங்கள் கையில்" என்ற திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகளுக்கு இலவச மடிக்கணினிகளை அமைச்சர்கள் எஸ்.ரகுபதி. சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் வழங்கினர்.*

*பின்னர், அமைச்சர் எஸ்.ரகுபதி நிருபர்களிடம் கூறியதாவது:*

*சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த போது திருப்பரங்குன்றம் விவகாரத்தில் நான் பேசியதில் எந்தவித நீதிமன்ற அவமதிப்பும் இல்லை. பிணத்தைச் சுடு காட்டில் தான் எரிக்க வேண்டும் என்பது பொதுவான விதி. ஒருவர் நடுரோட்டில்தான் பிணத்தை எரிப்பேன் என்று பிடிவாதம் பிடித்தால் அதனை அனுமதிக்க முடியுமா?*



*ஏற்கனவே நீதி மன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளின் அடிப்படையிலேயே, ஆதாரத்துடன் நான் கருத்துத் தெரிவித்தேன். இது வாதத்திற்காகச் சொல்லப் பட்ட ஒரு உதாரணமே தவிர, யாரையும் அநாகரிகமாகப் பேசவில்லை.*

*திருப்பரங்குன்றம் கோவில் தூணில் தீபம் ஏற்றியதற்கு ஏதேனும் வரலாற்று ஆதாரம் உண்டா? என்றுதான் நாங்கள் கேள்வி எழுப்பினோம். ஆனால் அதற்குப் பதில் கூறாமல், உண்மையை நிரூபிக்கத் தவறி வருகின்றனர். இந்த விவகாரத்தில் உயர்நீதி மன்றம் அளித்த உத்தரவை எதிர்த்து, தமிழக அரசு சார்பில் விரைவில் உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும்.*

*தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்கள் நலத்திட்டங்கள் மூலம் தொடர்ச்சியாக சிக்சர் அடித்து வருகிறார். ஆனால். எடப்பாடி பழனிச்சாமியும், அமித்ஷாவும் தொடர்ச்சியாக நோபால் வீசி வருகின்றனர். மத்திய அமைச்சர் அமித்ஷா தமிழகத்திற்கு எத்தனை முறை வந்தாலும், இங்கு எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை.*

*அ.தி.மு.க.வினர் ஆளுநரிடம் ஊழல் பட்டியல் அளிப்பது என்பது தேர்தல் நேரத்தில் அவர்கள் வழக்கமாகச் செய்யும் ஒரு நாடகம். நாங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. மாறாக, அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதுதான் பல்வேறு ஊழல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. நீதிமன்றத்தின் மீது தி.மு.க.விற்கு பெரும் மதிப்பும், மரியாதையும் உண்டு. எவ்வளவு பெரிய பாதிப்பு வந்தாலும் தி.மு.க. ஒருபோதும் நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபடாது.*

*இவ்வாறு அவர் கூறினார்.*